## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## ஐந்தாம் பத்து

### நான்காம் திருமொழி - உந்திமேல்
### திருவரங்கம் 1

** உந்தி மேல் நான்முகனைப் படைத்தான் * உலகு உண்டவன்
எந்தை பெம்மான் * இமையோர்கள் தாதைக்கு * இடம் என்பரால் **
சந்தினோடு மணியும் கொழிக்கும் * புனல் காவிரி *
அந்தி போலும் நிறத்து ஆர்வயல் சூழ் * தென்னரங்கமே 1

வையம் உண்டு ஆலிலை மேவு மாயன் * மணி நீள் முடி *
பைகொள் நாகத்தணையான் * பயிலும் இடம் என்பரால் **
தையலல்லார் குழல் மாலையும் * மற்றவர் தடமுலை *
செய்ய சாந்தும் கலந்திழி புனல் சூழ் * தென்னரங்கமே 2

பண்டு இவ்வையம் அளப்பான் சென்று * மாவலி கையில் நீர்
கொண்ட * ஆழித் தடக்கைக் * குறளன் இடம் என்பரால் **
வண்டு பாடும் மதுவார் புனல் * வந்திழி காவிரி *
அண்ட நாறும் பொழில் சூழ்ந்து * அழகார் தென்னரங்கமே 3

விளைத்த வெம்போர் விறல் வாள் அரக்கன் * நகர் பாழ் பட *
வளைத்த வல்வில் தடக்கை அவனுக்கு * இடம் என்பரால் **
துளைக்கை யானை மருப்பும் அகிலும் * கொணர்ந்து உந்தி * முன்
திளைக்கும் செல்வப் புனல் காவிரி சூழ் * தென்னரங்கமே 4

வம்புலாம் கூந்தல் மண்டோதரி காதலன் * வான் புக *
அம்பு தன்னால் முனிந்த * அழகன் இடம் என்பரால் **
உம்பர் கோனும் உலகேழும் * வந்து ஈண்டி வணங்கும் * நல்
செம்பொன் ஆரும் மதிள் சூழ்ந்து * அழகார் தென்னரங்கமே 5

கலை உடுத்த அகல் அல்குல் * வன்பேய் மகள் தாய் என *
முலை கொடுத்தாள் உயிர் உண்டவன் * வாழ் இடம் என்பரால் **
குலை எடுத்த கதலிப் * பொழிலூடும் வந்து உந்தி * முன்
அலை எடுக்கும் புனல் காவிரி சூழ் * தென்னரங்கமே 6

கஞ்சன் நெஞ்சும் கடு மல்லரும் * சகடமும் காலினால் *
துஞ்ச வென்ற சுடர் ஆழியான் * வாழ் இடம் என்பரால் **
மஞ்சு சேர் மாளிகை * நீடு அகில் புகையும் * மறையோர்
செஞ்சொல் வேள்விப் புகையும் கமழும் * தென்னரங்கமே 7

ஏனம் மீன் ஆமையோடு * அரியும் சிறு குறளுமாய் *
தானும் ஆய * தரணித் தலைவன் இடம் என்பரால் **
வானும் மண்ணும் நிறையப் * புகுந்து ஈண்டி வணங்கும் * நல்
தேனும் பாலும் கலந்து அன்னவர் சேர் * தென்னரங்கமே 8

சேயன் என்றும் மிகப் பெரியன் * நுண் நேர்மையினாய * இம்
மாயை யாரும் அறியா வகையான் * இடம் என்பரால் **
வேயின் முத்தும் மணியும் கொணர்ந்து * ஆர்புனல் காவிரி *
ஆய பொன் மாமதிள் சூழ்ந்து * அழகார் தென்னரங்கமே 9

** அல்லி மாதர் அமரும் * திருமார்வன் அரங்கத்தை *
கல்லின் மன்னு மதிள் * மங்கையர் கோன் கலிகன்றி சொல் **
நல்லிசை மாலைகள் * நாலிரண்டும் இரண்டும் உடன் *
வல்லவர் தாம் உலகாண்டு * பின் வானுலகு ஆள்வரே 10

**அடிவரவு:** உந்திமேல் வையம் பண்டு விளைத்த வம்பு கலை கஞ்சன் ஏனம் சேயன் அல்லி வெருவாதாள்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**